மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

போக்குவரத்துப் பணிமனை

***46435—திரு. மா. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, சைதாப்பேட்டையில் உள்ள போக்குவரத்துப் பணிமனைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாநகர போக்குவரத்துக் கழகம், சைதாப்பேட்டை பணிமனையில் தற்போது பணிமனைக்குத் தேவையான கட்டட வசதிகள் உள்ளன. எனவே, புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னமலை போக்குவரத்து பணிமனையின்மூலம் ஏற்கெனவே 114 பேருந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பணிமனையில் சரியான வசதிகள் இல்லையென்பதால், 20 பேருந்துகள் ஆதம்பாக்கம் பணிமனைக்கு மாற்றப்பட்டுவிட்டன.

2020 மார்ச் 13]

இப்போது அங்குள்ள கிளை மேலாளர் அலுவலகம், பணியாளர்களின் ஓய்வறைகள், உணவகம், உணவருந்தும்கூடம், கழிப்பறைகள், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலர் அலுவலகம், tool room போன்றவையெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. Asbestos sheet–ல் வேயப்பட்ட அந்தப் பணிமனை, இப்போது முற்றிலுமாக சிதைந்து, இன்னும் சொல்ல வேண்டுமென்றால், tool room திறந்த நிலையிலேயே இருக்கின்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் சொல்வதை யோசனையாகக்கூட எடுத்துக்கொள்ள வேண்டாம். ஓர் அன்பான வேண்டுகோளாகவே விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களால் கேட்கப்படும் கேள்விக்கான பதில், அவருடைய கருத்துருவைப் பெற்றுத்தான் வரும். அலுவலர்கள் கொடுக்கும் பதிலை அப்படியே படிப்பதைத் தவிர்த்துவிட்டு, சென்னை மற்றும் சென்னையைச் சுற்றிலும் கள ஆய்வை மேற்கொண்டு, எந்த இடத்திற்கு, எந்த மாதிரியான கேள்வியைக் கேட்டிருக்கின்றார்களோ, அங்கு நேரடியாகச் சென்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக கேள்வியைக் கேட்டு, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: களத்திற்குச் சென்று, யதார்த்தத்தை அறிந்து வந்து இங்கு பதில் சொன்னால், உறுப்பினர்களுக்கு மிக நன்றாக இருக்கும். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது 2018–2019 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாயை ஓய்வறைகள் கட்டுவதற்காக நான் தந்திருக்கிறேன். அதற்கான பணிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. Tool room திறந்த நிலையில் இருக்கின்றது. 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கிளை மேலாளர் அலுவலகம் இடிந்துவிழும் நிலையில் இருக்கின்றது. நேற்று மாலையில்கூட நேரடியாகச் சென்று பார்த்துவிட்டு வந்த பிறகுதான் நான் இந்தக் கேள்வியை இங்கு கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அனைத்து வசதிகளும் சரியாக இருக்கின்றன என்ற பதிலின்மூலம், அவர் யதார்த்தத்தை உணராமல் இருப்பது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ எழுதிக் கொடுத்ததை படிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். அப்படியெல்லாம் கிடையாது. அவர் 10 இலட்சம் ரூபாய் நிதி கொடுத்திருக்கிறார். இன்னும் ஒரு கோடி ரூபாயை அவர் கொடுத்துவிட்டால், பணிமனையில் மீதியுள்ள கட்டடங்களைக் கட்டி முடித்து விடுவோம். எழுதிக் கொடுத்ததை படிப்பது என்பது கிடையாது. எங்களுக்கு விவரங்கள் தெரியும். பார்த்து விட்டுத்தான் சொல்கிறோம். 10 இலட்சம் ரூபாய் உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.*

போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைமை என்ன என்பது அனைவருக்குமே தெரியும். இந்தப் பணிமனையில் அதிகளவில் பேருந்துகள் இருந்த காரணத்தினால்தான் சில பேருந்துகளை ஆதம்பாக்கத்திற்கு மாற்றினோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேயராக இருந்தவர், அவருக்குத் தெரிந்ததைச் சொல்கிறார். யதார்த்தம் தெரியாமல் அதிகாரிகள் எழுதிக் கொடுப்பதை மட்டும் படிப்பதில்லை; எல்லா விவரங்களையும் அறிந்துதான் இங்கு வந்து பதில் அளிக்கின்றோம். புதிய கட்டடம் வேண்டுமென்று கேட்டிருந்தார். இருக்கிற கட்டடங்களே போதுமானவை. Tool room, driver & conductor rest room *போன்றவற்றைத்தான் கேட்டிருக்கிறார். அவர் 10 இலட்சம் ரூபாய் நிதி கொடுத்திருக்கிறார். வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது அவருக்கே நன்றாகத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி வழங்கிய பிறகு, இரண்டு நாட்களுக்கு முன்பாக பணிமனைக்கு நேரடியாகச் சென்று, பார்வையிட்டும் வந்துள்ளார். அந்தத் தகவலும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தேவையிருக்கிற இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாடண்டர் நகர் பகுதியில் பொதுப் பணித் துறை மற்றும்*

2020 மார்ச் 13]

வீட்டு வசதி வாரியத் துறைகளின் மூலமாக 1,750 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அங்கே தலைமைச் செயலக ஊழியர்கள் மற்றும் அரசின் பல துறைகளைச் சார்ந்த அலுவலர்களும் வசித்து வருகின்றனர். மேலும், ஜோதியம்மாள் நகர், அரசுப் பண்ணை போன்ற குடிசைப் பகுதிகளும் அங்கே இருக்கின்றன. ஏறத்தாழ 4,000–க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் இருக்கின்ற அந்தப் பகுதிகளிலிருந்து ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த சிற்றுந்துகள் தற்போது நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்தச் சிற்றுந்துகள் நிறுத்தப்பட்டுள்ளதால் தியாகராய நகர், கோயம்பேடு போன்ற பல்வேறு பகுதிகளுக்குச் செல்வதற்கு மக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்தச் சிற்றுந்துகளை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மேற்கு சைதாப்பேட்டை பகுதியிலிருந்து 7S, 45D, K18 and 88D ஆகிய எண்கள் கொண்ட பேருந்துகள் குன்றத்தூர், தியாகராய நகர் மற்றும் கோயம்பேடு ஆகிய பகுதிகளுக்கு இயக்கப்பட்டு வந்தன. மேற்கு சைதாப்பேட்டை பகுதியிலிருந்து செல்கின்ற அனைத்து பேருந்துகளும் தற்போது அறவே நிறுத்தப்பட்டுள்ளதால் சைதாப்பேட்டை தொகுதி மக்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள்.

மேலும், கோட்டூர் பகுதியிலிருந்து ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த பேருந்துகளும் நிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே, போக்குவரத்துத் துறையின் மேலாண்மை இயக்குநர், சென்னை அவர்களிடம், 2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8 ஆம் தேதியன்று நானே நேரடியாகச் சென்று, பேருந்துகள் நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். புதிய இடங்களுக்கு வேண்டுமானால் போக்குவரத்து வசதிகள் செய்ய வேண்டாம் என்றும், ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்க வேண்டுமென்றும் நானே அவரிடம் நேரடியாகச் சென்று, கடிதம் அளித்துவிட்டு வந்தேன். கடிதம் கொடுத்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.இதுவரையில்எந்தவழித்தடங்களிலும்பேருந்துவசதிகள் செய்துதரப்படவில்லை. எனவே, பேருந்து வசதி நிறுத்தப்பட்டுள்ள வழித்தடங்கள் அனைத்திலும் மீண்டும் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2020 மார்ச் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வி கேட்கும்போது நீண்ட பட்டியலையே இங்கே வாசித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய வழித்தடங்களை ஆய்வு செய்து, பயணிகளுடைய அடர்வுகளுக்கேற்ப பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தன்னுடைய வருத்தத்தை இங்கே பதிவு செய்தார். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கும்போது, யதார்த்த நிலையை உணராமல் பதில் சொல்வதாக அவர் இங்கே தெரிவித்தார். அவருடைய அந்தக் கருத்தை நான் ஏற்க மறுக்கின்றேன். ஒவ்வொரு கேள்விகளுக்கும் அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும், துறை ரீதியாக பதில் வந்தாலும், சம்பந்தப்பட்ட அலுவலரை தொடர்புகொண்டு பேசி வருகிறோம்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள், என் துறை சம்பந்தமாக இன்று காலையில் கேள்வி கேட்கிறார் என்று தெரிந்தவுடன், சம்பந்தப்பட்ட இடங்களில் பணியாற்றும் இணை இயக்குநர், துணை இயக்குநர் உள்ளிட்ட அலுவலர்களைத் தொடர்புகொண்டு பேசினேன். பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர்களால் மூலக் கேள்வியில் வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் அங்கே இருக்கின்றனவா என்று களத்திலே ஆய்வு செய்து, ஒருவேளை வாய்ப்புகள் இல்லையென்றால் வேறு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கலாம் என்பதையும் ஆய்வு செய்து, துறை இயக்குநர்களுடன் விவாதித்து, அரசு செயலாளர்களுடன் விவாதித்து, அதற்குப் பிறகுதான் அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும் உரிய பதிலை இங்கே தெரிவிக்கிறோம். நிதிநிலைக்கேற்ப செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்தும்கூட

2020 மார்ச் 13]

maximum positive *ஆக பதில் சொல்கிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் துறையினுடைய பதில்களை நாங்கள் அப்படியே இங்கே தெரிவிப்பது வருத்தமளிக்கிறது என்று அவர் இங்கே பதிவு செய்த கருத்து, எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்கிற என்னுடைய வருத்தத்தையும் சேர்த்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. தகவல் கோரல்

(அ) N.P.R. நடைமுறைப்படுத்துவது குறித்து மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் 11–3–2020 அன்று அவையில் தெரிவித்த கருத்துக்கு மாறாக பத்திரிகைகளில் பேட்டியளித்திருப்பது மற்றும் N.P.R.–க்கு எதிரான தீர்மானம் கொண்டு வருதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டுவர விரும்புகிறேன். தாங்கள் நீண்டநாட்களாக இந்தச் சபையின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள். இந்தச் சபையினுடைய மரபு மற்றும் விதிகள் தங்களுக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக, சட்டமன்றம் இந்த தேதியில் கூட்டப்படுகிறது என்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பிறகு, தங்கள் மூலமாக அது தெரிவிக்கப்பட்ட பிறகு, அன்றைய நாளிலிருந்தே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் புதிய திட்டங்களை அறிவிக்கக் கூடாது என்பது விதி; புதிய கொள்கைகளை அறிவிக்கக் கூடாது என்பது விதி; புதிய அறிவிப்புகளையும் அறிவிக்கக் கூடாது என்பது விதி.*